பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 08 செவ்வாய்க்கிழமை 24.09.2024 கதிர் 321

## இனி இது ரகசியம் அல்ல!

அனுரவின் பதவியேற்பு நேற்று மிக எளிமையாக நடந்தது. அவரது ஆதரவாளர்கள் பாற்சோறு பொங்கி வழங்கி மகிழ்ச்சியைக் கொண்டாடினார்கள் என்றாலும் ☞ 2

# “நாம் மாற்றத்தை ஏற்படுத்த தயார்” மகா சங்கதினரிடம் அநுர தெரிவிப்பு

நாம் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு தயராகியுள்ளோம் என்பதை மகாசங்கத்தினருக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளோம் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மகாசங்கத்தினரை சந்தித்து ஆசி பெற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

புதிய மக்கள் ஆணையில் உள்ள மாற்றங்களுக்கு அமைவாக நாட்டைப் பொறுப்பேற்பதற்குத் தயாராக இருப்பதோடு, நாட்டு மக்கள் பெரும் மாற்றத்தினை எதிர்பார்த்துக் காத்திருப்பதை மகாசங்கத்தினருக்கு தெரியப்படுத்தினோம்.

நாட்டு மக்களில் விசேடமாகக் கிராமங்களில் உள்ள ஏழை மக்களின் வாழ்வாதாரம் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் சம்பந்தமாக கவனம் செலுத்துமாறு கோரிக்கை விடுத்தனர். நாம் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு தயராகியுள்ளோம் என்பதையும் அவர்களிடத்தில் தெரிவித்தேன் என்றார்.

பதவியேற்றவுடன் நாடாளு மன்றத்தைக் கலைப்பதாகக் கூறினீர்களே எப்போது கலைப்பீர்கள் என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இரண்டு நாட்கள் பொறுத்திருங்கள். அதற்கான பதிலை வழங்குவோம் என்று கூறினார்.



## இந்தியத் தூதர் நேற்று ஹரினியுடன் சந்திப்பு

இந்திய உயர்ஆணையர் எச். இ. சந்தோஷ் ஜா மற்றும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரியவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன்போது ஜனாதிபதி அநுர குமார திசநாக்கவின் வெற்றிக்கு இந்திய உயர் ஆணையர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தியா - இலங்கை இருத்தரப்பு முயற்சிகள் குறித்து ஹரிணிக்கு அவர் விளக்கமளித்துள்ளார்.

## புதிய ஜனாதிபதியால் நேற்று புதிய செயலர்கள் நியமனம்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஒரு சிலஅமைச்சுக்களுக்குபுதியசெயலாளர்களை நியமித்துள்ளார்.

பாதுகாப்புஅமைச்சின்புதியசெயலாளராக ஓய்வுபெற்ற விமானப்படையின் எயார் வைஸ் மார்ஷல் எச்.எஸ். துய்யகொந்த நியமிக்கப்பட்டுள்ளார். ☞ 2

# நிறைவேற்று அதிகாரத்தின் இறுதி ஜனாதிபதி அநுரவே

### சுனில் ஹந்துல் நெத்தி உறுதியாகத் தெரிவிப்பு

தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவே இலங்கையின் இறுதி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்று சுனில் ஹந்துல் நெத்தி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுகுமார திசாநாயக்க பதவியேற்றுக்கொண்ட பின்னர் செய்தி யாளர்கள் அவரிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தொரதித்தார்,அவர்மேலும்தெரிவித்ததாவது:

நாம் மக்களின் விருப்புக்கு ஏற்றவாறு தெரிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாகும். அந்தமக்களின்விப்பத்துக்குஆதரவாகநாம் வழங்கிய வாக்குறுதிகளை நாம் நிச்சயமாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகைள முன்னெடுக்கவுள்ளோம் -- என்றார்.

நாட்டுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படவேண்டும் என்று நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது. அதனை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டே 1994இல் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க முதற்கொண்டு, மகிந்த, மைத்திரி ஆகியோர் அந்தப்பதவிக்குவந்தனர். எனினும் அவர்கள் நிறைவேற்று அதிகார ஜநாதிபதிப் ☞ 2

## பதவியேற்ற பின்னர் அநுர தலதா மாளிகைக்கு பயணம்

### கட்டுக்கலை மாணிக்கப் பிள்ளையாரையும் தரிசித்தார்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்ற பின்னர் முதல் பயணமாக வரலாற்றுச்சிறப்புமிக்கதலதாமாளிகைக்கு நேற்று பிற்பகல் சென்று வழிபட்டார். பின்னர் மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகா நாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்றார்.

முதலில் மல்வத்து மகா விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி, மல்வத்து மகாநாயக்க தேரர் அதி வணக்கத்திற்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல ☞ 8

## இன்னும் ஓரிரு நாட்களில் நாடாளுமன்றம் கலையும்

### மகிந்த தேசப்பிரிய நம்பிக்கை

ஓரிரு நாட்களுக்குள் நாடாளுமன்ற கலைக்கப்படலாம் என்று முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இராஜகிரியவில் நேற்று செய்தியா ளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியின் உரைக் கமைய நாடாளுமன்றம் ஓரிருதினங்களுக்குள்கலைக் கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது. ஆனால் ஒக்டோபர் 26 எல்பிட்டி பிரதேச சபைத் தேர்தல் நடத்தப் படவேண்டும். ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்ததன் பின்னர் 52 முதல் 66 நாட்களுக்குள் பொதுத்தேர்தல் நடத்தப்படும்.

நாடாளுமன்றத் ☞ 8



## அரசியல் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி அமைச்சர் அலி சப்ரி திடீர் அறிவிப்பு

’பொதுச்சேவையை நிறைவுசெய்யும் இவ்வேளையில் எனது முயற்சிகளை ஆதரித்த,வழிகாட்டிய மற்றும் ஆக்கபூர்வமாக விமர்சித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைதெரிவிக்கவிரும்புகின்றேன். இனி சட்டத்துறை சார்ந்த எனது பணியைத்தொடரவிரும்புகிறேன்’என்று கூறித் தனது அரசியல் வாழ்விலிருந்து விடைபெற்றார் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி.

அது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உங்கள் நம்பிக்கையும், ஊக்கமும் தான் இந்த பயணம் முழுவதும் என்னை தாங்கிய தூண்கள். 2019ஆம் ஆண்டு நான் அரசியலில் காலடி எடுத்துவைத்தபோது எனது நாட்டிற்கு சேவைசெய்ய குறிப்பாக நீதியமைச்சை சீர்செய்வதில், எனது வாழ்நாளின் பெரும்பகுதியை ☞ 2

## வரலாற்றில் மிக அமைதியானது 2024 ஜனாதிபதித் தேர்தல்தான்

### பவ்ரல் தலைவர் ரோஹன தெரிவிப்பு

இலங்கை வரலாற்றிலேயே 2024 ஜனாதிபதித் தேர்தல்தான் மிக அமைதியான தேர்தல் என்று சுதந்திரமானதும்நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டின்(பவ்ரல்)நிறைவேற்று பணிப்பாளர்ரோஹனஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னரான முறைப் பாடுகள் தொடர்பில் குறிப்பிடு கையிலேயேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைவரலாற்றில்இதுவரை இடம்பெற்ற தேர்தல்களில் ☞ 2

## அமைதியான தேர்தலின் பின்னர் ஊரடங்குச் சட்டம் ஒரு முரண்பாடு

### ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழு தெரிவிப்பு

2024 ஜனாதிபதித் தேர்தல் மிகவும் அமைதியாக நடந்தது என்று ஆணைக்குழுவினால் கூறப்பட்ட அதே தினத்தில், திடீரென ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை ஒன்றுக் கொன்று முரணான என்று ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக்குழு தெரிவித் துள்ளது.

கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில், 2024 ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அது நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் குழுவின் தலைமை அதிகாரி இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் இன, மத பேதங்களை மையப்படுத்தி பிரிவினைகளை ☞ 2

## இனி இது .....

வன்முறைகள் குறித்து எழுப்பப்பட்ட அச்சம் எல்லாம் அர்த்தமற்றவை என்று அவர்கள் தங்கள் கட்டுக்கோப்பு மூலம் உணர்த்தினார்கள்.

வன்முறைகள் நடக்கும் என்று ரணில், சஜித் மட்டுமல்ல அநுரவுமேகூட நம்பினார். அதனால்தான் வாக்களிப்புத் தினத்தின் இரவும் அடுத்தநாள் நண்பகல் வரையிலும் ஊடரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்த அவர் அனுமதித்தார்.

தனது வெற்றி உறுதியானது என்று அவர் நம்பினார். அதனால் உற்சாகத்தில் ஒருவேளை தனது ஆதரவாளர்களேகூடக் கட்டுமீறிப் போகலாம் என்று அவர் கருதினார், அப்படி ஏதாவது நடந்து உற்சாக மிகுதியால் ஜேவிபி ஆதரவாளர்கள் அத்துமீறிவிட்டால் தனது வெற்றி களங்கப்படுத்தப்படும் என்ற அச்சம் அவருக்கிருந்தது. எனவேதான் ஊரடங்கு பிறப்பிக்கப்போகிறேன் என்று ரணில் கேட்டபோது அவர் சம்மதித்தார். ஆனால், வாக்களிப்பின் பின்னர் எந்தவொரு முறைப்பாடும்அற்றமிகஅமைதியானதேர்தல் என்று கண்காணிப்புக் குழுக்கள் பாராட்டும் அளவிற்கு ஜேவிபியினர் பொறுப்போடும் பொறுமையோடும் நடந்துகொண்டனர்.

பதவியேற்பு நிகழ்வும் எளிமையாக நடத்தப்பட்டது. விடயங்களை அவசரப்படாமல் நிதானமாகக் கையாள்வதில் அநுரவும் ஜேவிபியினரும் கருத்தாக இருக்கின்றனர். ஆட்சி செய்வதில் தங்களுக்கு அனுபவமில்லை என்று தெரிவிக்கப்படுவதை வெளிப்படுத்திவிடக்கூடாது என்பதில் அவர்கள் உறுதியாகஇருக்கின்றனர்என்றேபடுகின்றது. ஜேவிபி நாடாளுமன்ற உறுப்பினரான ஹரினியிடம் செய்தியாளர் ஒருவர் இது தொடர்பில் கேள்வி எழுப்பினார். "உங்களுக்கு ஆட்சி செய்வதில் அனுபவமில்லை என்று சொல்கிறார்களே இதை எப்படிப் பார்க்கிறீர்கள்?" என்றார். அவரோ சிரித்துக்கொண்டே எந்தப் பதற்றமும் இன்றி "ஆமாம்! நாட்டை எப்படி வங்குரோத்தாக்குவது என்று எங்களுக்கு அனுபவமில்லைத்தான்" என்றார். சிறப்பான அந்தப்பதில் இப்போது பெரிதும் சிலாகிக்கப்பட்டு வருகின்றது.

பதவியேற்ற முதல் நாளே அநுரவிடம் இருந்து பல அதிரடி அறிவிப்புக்கள் வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் அவர் நிதானமாக அதிகாரத்தை தனது கைகளுக்குக் கொண்டுவருவதில், அந்த மாற்றம் அமைதியாக நிகழ்வதில் அக்கறையோடு செயற்படுகிறார். அதனால் நேற்று அமைச்சுக்களின் செயலாளர்களை மாற்றுவது மட்டுமே அவரது பணியாக இருந்தது. பதவியேற்று 24 மணி நேரத்தில் நாடாளுமன்றத்தைக் கலைப்பதாக தேர்தல் பரப்புரைகளின் போது கூறிவந்தாலும், இப்போது அதிகார மாற்றம் மிக இயல்பாகத் தமது கைகளுக்கு வந்து சேரும் வரையும் அவசரப்படாமல் நிதானமாகச் செயற்படுவதிலேயே அவர்கள் குறியாக இருக்கிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினிக்கு பிரதமர் பதவி வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் அதிலும் அவசரம் காட்டப்படவில்லை. அரச நிர்வாக அதிகாரத்தைத் தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதுதான் அநுரவின் இலக்காக இருக்கிறது. ஏனெனில் தலைமையில் என்னதான் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டாலும் அரச நிர்வாகம் கடந்த70 வருடங்களுக்கும் மேலாக மாறி மாறி ஐதேகவுக்கும் சுதந்திரக் கட்சிக்கும் பின்னர் மொட்டுக் கட்சிக்குமாக பணியாற்றிய விசுவாசத்தையே கொண்டிருக்கின்றது. அங்கிருக்கும் தலைகள் எல்லாம் இந்தப் பாரம்பரியத்தில் ஊறித் திளைத்தவர்கள். எனவே அவர்கள் எப்போது வேண்டுமானாலும் தம்மோடு ஒத்துழைக்காமல் பிரச்சினையைக் கிளப்பக்கூடும் என்பது அநுரவுக்குப் புரிந்திருப்பதால் அந்த வகையிலான இடைஞ்சல்கள் ஏற்பட்டு நாடு குழம்பாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அதிகாரத்தை உறுதிப்படுத்திய பின்பே அதிரடி நடவடிக்கைகளில் அவர் இறங்குவார் என்கிறார்கள்.

ஒரு மாற்றத்திற்காக வாக்களித்திருக்கும் மக்கள் அவரிடமிருந்து அந்த மாற்றம் விரைந்து வெளிவரவேண்டும் என்று ஆவலோடு காத்திருக்கிறார்கள். அதற்கு மத்தியில் இயல்பான, குழப்பங்களற்ற அதிகார மாற்றத்தை உறுதி செய்ய அநுர எடுத்துவரும் நடவடிக்கைகள் அவர்களின் பொறுமையைச் சோதிக்குமா என்பதே இப்போதுள்ள கேள்வி.

இதற்கிடையே வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸும் வடமேல் மாகாண ஆளுநர் நஸீரும் தமது பதவிகளில் இருந்து வெளியேறியுள்ளனர். இவர்களுடன் மொத்தம் 4 மாகாண ஆளுநர்கள் பதவி விலகியுள்ளனர். அவர்களுடன் ஏனைய மாகாண ஆளுநர்களையும் தலைமைச் செயலாளர்களையும் மாற்றவேண்டிய தேவையும் அநுரவுக்கு இருக்கிறது. எனவே அடுத்து வரும் நாள்கள் மிக முக்கியமானவை ஜேவிபியின் அதிகார மாற்றத்திற்கு.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நிறைவேற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவியை ஒழிக்கவில்லை. அதன் பின்னர் அந்தப் பதவிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ச நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை மேலும் பலப்படுத்தினார்.

## வரலாற்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2024ஜனாதிபதிதேர்தல்மிகவும்அமைதியான முறையில் நடைபெற்றது. தேர்தல் இடம்பெற்ற பின்னர்பல்வேறுசட்டமீறல்கள், வன்முறைகள் தொடர்பில் கடந்தகாலங்களில் முறைப்பாடுகள் பதிவாகி இருக்கிறன்றபோதும் இந்த முறை ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் இதுவரை எந்த முறைப்பாடும் பதிவாகவில்லை.

அதனால் தேர்தலுக்கு பின்னரான இந்த காலப்பகுதியில் தொடர்ந்தும் அமைதியாக செயற்படுமாறு நாட்டு மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம். ஒட்டுமொத்த தேர்தல் காலப்பகுதியில் தேர்தல் சட்டமீறல்கள் மற்றும் பயமுறுத்தல், அச்சுறுத்தல்கள் என எமது பெப்ரல் நிறுவனத்துக்கு 1800 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த முறைப்பாடுகளில் அரச அதிகாரம், அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் மற்றும் சமூக வலைத்தலங்கள் ஊடாக இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் பதிவாகியிருந்தன.

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவானது, தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியிலிருந்து தேர்தல் தினத்தன்று வரைக்கும் முக்கிய பங்காற்றியுள்ளது. பொலிஸ் மா அதிபர் பதவி வெற்றிடம் காணப்பட்டாலும், தேர்தல் செயன்முறை முழுவதும்சட்டம்ஒழுங்கைவினைத்திறனாகப் பேணுவதற்கும், பக்கச்சார்பற்ற வகையில் செயலாற்றுவதை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கைப் பொலிஸ் திணைக்களம் ஏற்புடைய அனைத்து நிறுவனங்களுடனும் ஒத்துழைப்புடன் செயலாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதித் தேர்தலை ஒழுங்குபடுத்தல், தேர்தல் சட்டங்கள் மீறப்படுவதைக் குறைத்தல், வன்முறைகளைக் குறைத்தல் மற்றும் பிரஜைகளின் வாக்குரிமையைப் பாதுகாத்தமைக்காக தேர்தல் ஆணைக்குழுவுக்கும், இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கும் பெப்ரல் அமைப்பு தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. அமைதியான தேர்தலை நடத்துவதற்கு, குறிப்பாக ஜனநாயகத்தின் மீது ஆழ்ந்த அர்ப்பணிப்புக் கொண்டு ஒத்துழைப்பு நல்கிய பிரஜைகளுக்கு எமது நன்றிகளை தெவித்துக்கொள்கிறோம் என்றார்.

## புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசமைப்பின் 52 (ஐ) பிரிவின் ஊடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைவாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சீனத் தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழக பாதுகாப்புக் கல்வி தொடர்பான விஞ்ஞானப் பட்டதாரியான அவர், கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரியுமாவார்.

எம்.ஐ.24 தாக்குதல் ஹெலிகொப்டர் படையின் முன்னாள் கட்டளை அதிகாரி, அநுராதபுரம் விமானப்படை தளத்தின் முன்னாள் கட்டளை அதிகாரி, சீன துறைமுக விமானப்படை கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி, பாகிஸ்தானுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் கட்டுநாயக்க விமானப்படை தளத்தின் கட்டளை அதிகாரி மற்றும் விமானப்படை தலைமையகத்தின் முன்னாள் பயிற்சிப் பணிப்பாளரான அவர் வீரவிக்ரம, விபூஷண ரணவிக்ரம மற்றும் ரண சூர பதக்கங்களையும் வென்றுள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக டி.டபிள்யூ. ஆர். பி.செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். ரவி செனவிரத்ன, கொழும்பு பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகள் தொடர்பில் முதுமாணிப் பட்டம் பெற்றவர். ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரான அவர், விசேட அதிரடிப் படையின் ஆரம்பகால உறுப்பினராகவும், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதிப் பணிப்பாளராகவும், தாய்லாந்துக்கான இலங்கைத் தூதரகத்தின் முன்னாள் முதல் செயலாளராகவும், இன்டர்போல் இலங்கைக் கிளையின் முன்னாள் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

# புதிய அரசியல் கூட்டணியினை அமைக்கத் தயாராகிறது ஐதேக

எதிர்வரும் தேர்தல்கள் மற்றும் அரசியல் சவால்களுக்கு தயாராகும் வகையில், ஐக்கிய தேசியக்கட்சி அனைத்து எதிர்க்கட்சிகளுடனும் பொதுவான கூட்டணியை அமைக்க தீர்மானித்துள்ளது.

கொழும்பு பிளவர் வீதியிலுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற தலைமைத்துவச் சபைக் கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டணிக்கான பிரேரணை முன்னாள் ஜனாதிபதி விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, எதிர்காலத் தேர்தல் மற்றும் அரசியல் சூழ்நிலைகளை ஒன்றிணைந்து எதிர்கொள்ள உத்தேச கூட்டணியில் இணையுமாறு ஐக்கி மக்கள் சக்தி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்குமாறு அவர் கட்சி நிர்வாகிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# காஞ்சன வெளியேறினார்

எரிசக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு பதவியிலிருந்து நீங்கி விட்டார் எனவும் தன்னிடம் இருந்த அரச வாகனங்கள் மற்றும் அலுவலகத்தை ஒப்படைத்து விட்டார் எனவும் முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தனது பொறுப்பில் இருந்த நிறுவனங்களை 2022இல் இருந்த நிலையில் இருந்து மீட்டு வலுவான நிதி இருப்புடைய நிறுவனங்களாகத் தான் மீள ஒப்படைத்துள்ளார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் அரசு வாகனங்கள் மற்றும் எனது அலுவலகத்தை நேற்றைய தினம் (22) மீள ஒப்படைத்துவிட்டேன். மேலும் எனது அமைச்சுப் பதவியிலிருந்தும் நீங்கிவிட்டேன். எனது நிர்வாகத்தின் கீழ் இருந்த நிறுவனங்களின் நிதி நிலைமை உறுதியாக இருக்கிறது. எரிசக்தி மற்றும் மின்சக்தி வழமை போல் இயங்குவதற்கு தேவையான பொருள் இருப்புகளும் இருக்கின்றன.

அனைத்து நிறுவனங்களிலும் இப்போது நேர்மறையான இருப்புநிலைக் குறிப்பு, அதன் சேவைகளுக்கான செலவு மீட்பு, விநியோகத்தர்களுக்கு சரியான நேரத்தில் பணம் செலுத்துதல், நிலுவையில் உள்ள கடனைச் செலுத்துதல் போன்ற செயற்பாடுகள் முறையாக இடம்பெறுவதுடன் அந்த நிறுவனங்ளினால் கிடைக்கும் வருமானத்தில் அதிக வருமானத்தை திறைசேரிக்கு வழங்குகின்றன.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சக ஊழியர்கள், எனது குடும்பத்தினர், நண்பர்கள், அமைச்சு மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், இராஜதந்திர பணிகள், மேம்பாட்டு முகாமைகள், பல்வேறு அரசு மற்றும் தனியார் பங்குதாரர்கள் மற்றும் கடந்த இரண்டு ஆண்டுகளில் உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

2022இல் 4-13 மணி நேர மின்வெட்டு, எரிபொருள் இன்மை, நிலக்கரி இன்மை , பெட்ரோலியப் பொருட்கள் இன்மை , விநியோகஸ்தர்கள் இன்மை, பணமின்மை, வரையறுக்கப்பட்ட ஹைட்ரோ கொள்ளளவு ஆகிய நிலைமைகள் இருந்தன. ஆனால் அந்த நிலைமைகளை மாற்றி தடையில்லா எரிபொருள் விநியோகம் மற்றும் மின் உற்பத்தி, நிலக்கரி, பெட்ரோலியப் பொருட்கள், ஹைட்ரோ கொள்ளளவு மற்றும் நிதி ரீதியாக வலுவாகவும் போதுமான அளவு கையிருப்பில் வைத்திருக்குமளவுக்கும் நிறுவனங்களாக அவற்றை மீண்டும் ஒப்படைத்துள்ளேன் என்றார்.

## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான் அர்ப்பணித்த துறையில், ஒரு தெளிவான பார்வையால் உந்தப்பட்டேன்.

நாங்கள் பயணிக்கப்போகும் பாதை எதிர்பாராதவிதமாக கரமுரடானதாக மாறுகின்றது. உலகமும் நாடும் விரைவில் அசாதாரண சவால்களின் பிடியில் சிக்கின. கொவிட் 19 பெருந்தொற்றும், அதன் பின்னர் உக்ரைனில் வெடித்த போரும், அதன் தீவிரமான நீண்ட விளைவுகளும், சர்வதேச ஸ்திரதன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தின. இது எங்கள் நாட்டின் வரலாற்றில் மிக மோசமான நெருக்கடிக்கு வழிவகுத்தது. நாம் நினைத்து பார்க்க முடியாத வகையில் எங்களின் மீள் எழும் திறனை சோதனை செய்தது.

இந்த கடினமான காலங்களில் எனக்கு பல பதவிகளில் சேவையாற்றுவதற்கான கௌரவம் கிடைத்தது, நீதியமைச்சராக, நிதியமைச்சராக இறுதியாக அயலுறவுத்துறை அமைச்சராக. ஒவ்வொரு பதவியும் அவற்றிற்கே உரிய சவால்களுடன் வந்தன. என் மீது வைக்கப்பட்ட நம்பிக்கையை நிறைவேற்றுவதற்கு நான் என்னால் முடிந்தளவிற்கு சிறப்பாக செயற்பட்டேன்.

அயலுறவுத்துறை அமைச்சராக உலகளாவிய ரீதியில் தலைவர்கள் இராஜதந்திரிகள் சர்வதேச அமைப்புகளின் தலைவர்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. இலங்கையை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சியை நோக்கி நகர்வதற்கான முயற்சிகளின்போது அவர்களின் தளர்ச்சியற்ற ஆதரவும், இணைந்த செயற்பாடுகளும் எங்களிற்கு அளவிட முடியாத பெறுமதி உடையவையாகக் காணப்பட்டன.

எங்களின் இருள்மயமான தருணங்களில் வெளிப்படுத்தப்பட்ட நன்றிக்காக நான் ஆழமான நன்றியுடையவனாகயிருக்கின்றேன். பொதுச்சேவை என்பது எப்போதும் இலகுவான பாதையில்லை. அதற்கு நேரமும் சக்தியும் மாத்திரமல்ல ஆழமான தியாகமும் அர்ப்பணிப்பும் அவசியம். ஒருவன் நேர்மையுடன் சேவையாற்ற முயலும்போது, அந்தத் தியாகங்கள் இன்னமும் பெரிய விடயங்களாக உணரப்படும்.

நான் எனது பயணத்தை பற்றி சிந்திக்கும்போது, எங்கள் தேசத்தின் சவாலான தருணங்களில் என்னால் வழங்கப்பட்ட பங்களிப்பு குறித்து (அது எவ்வளவு சிறியதாக காணப்பட்டாலும்) நான் பெருமிதம் கொள்கின்றேன்.

அரசியலில் ஈடுபடுவது என்பது எனக்கு இயல்பாக கிடைத்த ஒரு பாதையில்லை. எதிர்பார்த்த எதிர்பாராத பல சவால்களை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. ஆனால் இவற்றின்போது பல வருடங்களிற்கு முன்னர் எனது தந்தை வழங்கிய ஆலோசனையை நான் இறுக்கமாக பின்பற்றினேன். "உங்களால் கட்டுப்படுத்த முடிந்தவற்றை கட்டுப்படுத்துங்கள், கட்டுப்படுத்த முடியாதவை குறித்து நேரத்தை வீணடிக்கவேண்டாம்" இந்த வார்த்தைகள் எப்போதும் எனக்கு வழிகாட்டியுள்ளன, பாதை எதுவென்பது தெரியாத தருணங்களிலும் முன்னோக்கி நகர இந்த வார்த்தைகள் எனக்கு உதவியுள்ளன.

தற்போது அரசியல் வாழ்க்கையிலிருந்து விலகும் இந்த தருணத்தில் எனது முதல் ஆர்வமான சட்டதுறையில் மீண்டும் ஈடுபடுவது குறித்து எதிர்பார்த்துள்ளேன். மீண்டும் ஒருமுறை நன்றி என்று குறிப்பிட்டுள்ளார்.

## அமைதியான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊக்குவிக்காத, மிக அமைதியான முறையில் நடைபெற்ற தேர்தலாக அமைந்திருந்தது.

தேர்தல் ஆணைக்குழு வெளிப்படைத்தன்மை, செயற்திறன்மிக்கதன்மையுடன், எவ்வித சந்தேகங்களையும் தோற்றுவிக்காத

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# நாட்டின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஏனையோர் வாக்கு

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிட்டதிலித்ஜயவீர122,396வாக்குகளையும், விஜயதாஸ ராஜபக்ஷ 21,306 வாக்குகளையும், சரத்பொன்சேகா 22,407 வாக்குகளையும், நுவன் போபகே 11,191 வாக்குகளையும், எம்.திலகராஜா 2,138 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

2022ஆம்ஆண்டுநாடுமுகங்கொடுக்கநேர்ந்த மிகமோசமான பொருளாதார நெருக்கடி மற்றும் மக்கள் தன்னெழுச்சிப்போராட்டம் ஆகியவற்றின் பின்னர் நடைபெற்ற இந்த ஜனாதிபதித்தேர்தல் மிகவும் காத்திரமானதாக நோக்கப்பட்ட நிலையில், இதுவரை நடைபெற்ற ஜனாதிபதித்தேர்தல்களில் இம்முறையே அதிகூடிய எண்ணிக்கையான வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

அதன்படி39வேட்பாளர்கள்வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்த போதிலும், தேர்தலுக்கு முன்பதாகவே சுயேச்சை வேட்பாளர் ஐதுருஸ் முஹம்மது இலியாஸ் உடல்நலக்குறைவின் காரணமாக உயிரிழந்தமையால், கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தேர்தலில் 38 வேட்பாளர்களே போட்டியிட்டனர்.

அதற்கமைய இலங்கை கம்யூனிஸக் கட்சிசார்பில் போட்டியிட்ட திலித் ஜயவீர 122,396 வாக்குகளையும், தேசிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிட்ட விஜயதாஸ ராஜபக்ஷ 21,306 வாக்குகளையும், சுயேச்சையாகப் போட்டியிட்ட சரத் பொன்சேகா 22,407 வாக்குகளையும், சோசலிஸ மக்கள் மன்றம் சார்பில் போட்டியிட்ட நுவன் போபகே 11,191 வாக்குகளையும், மலையக மக்கள் சார்பில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்ட எம்.திலகராஜா 2,138 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

அதேவேளை புதிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிட்ட ஓசல ஹேரத் 4,253 வாக்குகளையும், இலங்கைதொழிலாளர்கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஏ.எஸ்.பி.லியனகே 1,860 வாக்குகளையும், தேசிய அபிவிருத்தி முன்னணி சார்பில் போட்டியிட்ட எஸ்.கே.பண்டாரநாயக்க 4,070 வாக்குகளையும், ஐக்கிய சோசலிஸ கட்சியின் சார்பில் போட்டியிட்ட சிறிதுங்க ஜயசூரிய 8,954 வாக்குகளையும், புதிய சிஹல உறுமய கட்சி சார்பில் போட்டியிட்ட சரத் மனமேந்திர 1,911 வாக்குகளையும், ஜனசேனா முன்னணி சார்பில் போட்டியிட்ட பத்தரமுல்லே சீலரத்ன தேரர் 6,839 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

அதேபோன்று அருனலு மக்கள் முன்னணி சார்பில் போட்டியிட்ட கே.ஆர்.கிறிஷான் 13,595 வாக்குகளையும், சோசலிஸ சமத்துவக்கட்சிசார்பில்போட்டியிட்டபானி விஜேசிறிவர்தன 4,410 வாக்குகளையும், நவ சமசமாஜ கட்சி சார்பில் போட்டியிட்ட பிரியந்த புஸ்பகுமார 12,760 வாக்குகளையும், எங்கள் மக்கள் சக்தி சார்பில்போட்டியிட்டஜே.டீ.கே.விக்ரமரத்ன 4,676 வாக்குகளையும், இலங்கை சமசமாஜ கட்சி சார்பில் போட்டியிட்ட மஹிந்ததேவகே5,338வாக்குகளையும், ஐக்கிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட அப்துல் மொஹமட் இன்பாஸ் 6,531 வாக்குகளையும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் போட்டியிட்ட அனோஜ டி சில்வா 12,898 வாக்குளையும், ஐக்கிய இலங்கை முன்னணி சார்பில் போட்டியிட்ட ஜனக ரத்நாயக்க 2,405 வாக்குகளையும், ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்ட லலித் த சில்வா 3,004 வாக்குகளையும், றுஹுணு மக்கள் முன்னணி சார்பில் போட்டியிட்ட அஜந்த த சொய்ஸா 10,548 வாக்குகளையும், நாமல் ராஜபக்ஷ 12,700 வாக்குகளையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

மேலும் இம்முறை தேர்தலில் சுயேச்சைவேட்பாளர்களாகப்போட்டியிட்ட சரத் கீர்த்திரத்ன 15,187 வாக்குகளையும், கே.கே.பியதாஸ47,543வாக்குகளையும், ஆனந்தகுலரத்ன 4,013 வாக்குகளையும், அக்மீமன தயாரத்ன தேரர் 11,536 வாக்குகளையும், சிறிபால அமரசிங்க 9,035 வாக்குகளையும், அன்டனி விக்டர்பெரேரா 10,374 வாக்குகளையும், மானகேபேமசிறி5,822வாக்குகளையும், அனுர சிட்னி ஜயவர்தன 2,799 வாக்குகளையும், டீ.எம்.பண்டாரநாயக்க 30,660 வாக்குகளையும், ரொஷான் ரணசிங்க 4,205 வாக்குகளையும், சமிந்த அனுருத்த 15,411 வாக்குகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

## நாட்டு மக்கள் அபிலாஷைகளின் பிரதிபலிப்பே அநுரவின் வெற்றி

### ரிஷாத் பதியுதீன்

அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றி நாட்டு மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், ஒருமைப்பாட்டையும், அபிவிருத்தியையும் ஊக்குவிப்பதன்ஊடாகமக்கள்வழங்கியஆணையை அவர் ஈடேற்றுவார் எனத் தாம் நம்புவதாகத் தெரிவித்திருக்கிறார்.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தலின் முதலாவது வாக்குகள் எண்ணப்பட்டு வெளியான முடிவுகளின் பிரகாரம் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையிலிருந்த வேளையில், அவரது வெற்றிக்கு வாழ்த்துக்கூறி தனது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளத்தில் பதிவொன்றைச் செய்த ரிஷாத் பதியுதீன், அப்பதிவில் மேலும் கூறியிருப்பதாவது –

'இலங்கையின்ஜனாதிபதியாகத்தெரிவாகியிருக்கும் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்துக்கள்.



இந்த வெற்றி நாட்டு மக்களின் அபிலாஷைகளின் வெளிப்பாடாகும். நாட்டு மக்களுக்கு இடையில் ஒருமைப்பாட்டைஏற்படுத்துவதுடன், அபிவிருத்தியை ஊக்குவிப்பதன் ஊடாக மக்கள் உங்களுக்கு வழங்கிய ஆணையை உரியவாறு ஈடேற்றுவீர்கள் என நாம் நம்புகின்றோம். உங்களது வெற்றிக்கும், நீங்கள் அளிக்கவிருக்கும் தலைமைத்துவத்துக்கும் வாழ்த்துக்கள்' எனக் குறிப்பிட்டிருக்கிறார். (05)

## இலங்கையின் புதிய ஜனாதிபதிக்கு இந்தியப் பிரதமர் மோடி வாழ்த்து

இலங்கையின் புதிய ஜனாதிபதியாகதெரிவுசெய்யப்பட்டுள்ள அனுரகுமாரதிசநாயக்கவிற்கு இந்திய பிரதமர் நரேந்திரமோடி தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஜனாதிபதி தேர்தலில் உங்களின் வெற்றிக்கு எனது பாராட்டுக்கள், இந்தியாவின் அயல்நாடுகளிற்கு முன்னுரிமை விசன் சாகர் கொள்கையில் இந்தியா இலங்கைக்கு முதலிடத்தை அளித்துள்ளது என இந்திய பிரதமர் தெரிவித்துள்ளார்.

எங்கள் மக்களினதும் பிராந்தியத்தினதும் நன்மைக்காக எங்களின் பல்தரப்பட்ட ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்காக உங்களுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளேன் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.(05)

## அனுர குமாரவிற்கு ஜூலிசங் வாழ்த்து



ஜனாதிபதி தேர்தலில் பெற்ற வெற்றிக்காக அமெரிக்கா அனுரகுமாரதிசநாயக்கவிற்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தங்கள் ஜனநாயக உரிமைகளை அமைதியான முறையில் பயன்படுத்தியமைக்காக இலங்கை மக்களை பாராட்டுகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

பகிரப்பட்ட முன்னுரிமைகளின் அடிப்படையில் இணைந்து செயற்பட தயார் என அவர் தெரிவித்துள்ளார்.(05)

## புதிய ஜனாதிபதி அநுரவுக்கு ஜப்பான் தூதுவரின் வாழ்த்து

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகொஷி ஹிதேகி, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் புதிய ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட அனுரகுமார திஸாநாயக்க அவர்களுக்கு தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவை மேம்படுத்துவதில் அனுரகுமார திஸாநாயக்கவுடன் இணைந்து பணியாற்ற அவர் எதிர்பார்த்துள்ளார்.



இலங்கை மக்கள் தமது தலைவரை தெரிவு செய்வதில் இலங்கையின் ஜனநாயக செயற்பாட்டில் தீவிரமாக பங்குபற்றியமைக்காக நாம் வாழ்த்த விரும்புகிறோம். அனுரகுமார திஸாநாயக்க மற்றும் இலங்கை மக்களின் தலைமையிலான புதிய நிர்வாகத்துடன் பொருளாதார மற்றும் சமூக இலக்குகளை அடைவதற்கும் எமது வலுவான உறவை அடைவதற்கும் ஜப்பான் தயாராக இருக்கும்.

இலங்கையிலும், ஜப்பானிலும் தலைவர்கள் மாறினாலும் எங்களுடைய நட்பு வலுப்பெற்றது என்பது வரலாறு. இலங்கையில் இம்முறை நடைபெறவுள்ள தேர்தல், கடந்த காலத்தைப் போலவே, புதிய பக்கங்களிலும் புதுப்பிக்கப்பட்ட நட்புறவு மற்றும் ஒத்துழைப்பின் கதைகளால் நிரப்பப்படும் வகையில் எமது உறவின் பக்கம் திரும்பும் என்று நாங்கள் நம்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.(05)

## பதவி விலகினார் பிரதமர் தினேஷ் குணவர்தன

பிரதமர் தினேஷ் குணவர்தன பிரதமர் பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார்.

தனது பதவிவிலகல் கடிதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார் பிரதமர் தினேஷ் குணவர்தன. (05)



## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


# யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளல்

புதிதாகப்பதவியேற்றுள்ளஅரசுத்தலைவரான அநுரகுமார திசநாயக்கவே இலங்கையின் இறுதி நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் என்று ஜேவிபி கட்சியின் உயர் அரசியல் பீட உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துல் நெத்தி தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக, கிட்டத்தட்ட 2 தசாப்த காலமாக, நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறைமை நடைமுறைக்கு வந்து அரைவாசிக் காலத்திற்கும் மேலாக இந்த முறைமை இலங்கைக்குப் பொருத்தமற்றது என்கிற எதிர்ப்பு இருந்துகொண்டே இருக்கின்றது. 1978இல் இந்த நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறையை அறிமுகப்படுத்திய பின்னர் அதன் முதல் அரசுத் தலைவரான ஜே.ஆர்.ஜெவர்த்தன, ஆணைப்பெண்ணாகவும்பெண்ணை ஆணாகவும்மாற்றுவதைத்தவிரஅனைத்துஅதிகாரங்களும் தன்னிடம் இருப்பதாகக் கூறினார் என்றொரு கதையுண்டு. அந்தளவிற்கு தனிமனித அதிகாரக் குவிப்பின் மையமாக இருந்தது இந்த ஆட்சிமுறை.

அதனாலேயே இந்த முறையை ஒழிக்கவேண்டும், இது சர்வாதிகார ஆட்சிக்கு வித்திடுகின்றது என்கிற கண்டனம் நீண்டகாலமாக ஒலித்து வந்தது. இலங்கையில் மனித உரிமை மீறல்கள் அளவுக்கதிகமாக நிகழ்வதற்கும், போரில் அளவுகடந்த சட்டவிரோதக் கொலைகளும் காணாமற்போகச் செய்தல்களும் இடம்பெறுவதற்கும் இந்த நிறைவேற்று அதிகார முறைமை ஒரு கவசமாகச் செயற்பட்டு வந்தது, இதுவரையில் இருந்துகொண்டும் இருக்கின்றது. இதன் பாதிப்பை கடந்த காலங்களில் ஜேவிபியும் மிகப் பெரியளவில் அனுபவித்திருக்கின்றது. அதனாலோ என்னவோ இந்த முறையை மாற்றவேண்டும் என்று அந்தக் கட்சி நீண்ட காலமாகவே வலியுறுத்தி வருகின்றது. இப்போது ஆட்சிக்கு வந்த பின்னரும் அதைத் தாங்கள் செய்வோம் என்று அவர்கள் கூறுவது மகிழ்ச்சிக்குரியது.

இருப்பினும், அரசுத்தலைவர் தேர்தலில் அவர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய வாக்குகளின் அடிப்படையில் பார்த்தால், அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு புதிய அரசமைப்பைக் கொண்டு வந்து நிறைவேற்றக்கூடிய, அதாவது நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறையை ஒழிப்பது மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பவற்றை மேற்கொள்ள புதிய அரசமைப்புத்தான் ஒரே வழி என்று ஜேவிபி கருதும் நிலையில் அதனைச் செய்வதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றும் சாத்தியங்கள் குறைவு. அதன் எதிர்த் தரப்பில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன கணிசமான ஆசனங்களைக் கைப்பற்றக்கூடிய வாய்ப்புள்ளது. அப்படி ஜேவிபிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கவில்லை என்றால், ஜேவிபி கூறும் வகையில் நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறைமையை ஒழிப்பதற்கும் புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்கும் இந்தக் கட்சிகள் ஜேவிபிக்கு ஒத்துழைக்கும் என்று எதிர்பார்க்கமுடியாது. கடந்த காலங்களில் அவை எவ்வளவுதான் இத்தகைய முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்து வந்தன என்றாலும் ஜேவிபி ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி அதன் மூலம் மக்கள் செல்வாக்குப் பெறுவதை அவை விரும்பமாட்டா. எனவே அவற்றிடம் இருந்து இந்த முயற்சிகளுக்குப் போதிய ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியாது. அந்தத் தருணத்தில் ஜேவிபிக்கு கைகொடுக்கக் கூடிய கட்சிகள் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் மட்டுமே.

ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றியமையோடு மட்டும் நினைக்கும் மாற்றங்கள் எல்லாவற்றையும் நிகழ்த்திவிட முடியாது என்கிற யதார்த்தத்தோடு, விரைவில் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலும் தன்னை நோக்கிய மக்கள் அலையைஉருவாக்குவதோடுவடக்கு, கிழக்கு, மலையகத்தில் தமிழ், முஸ்லிம் கட்சிகளோடும் ஒரு புரிந்துணர்வை வளர்ப்பதும் போதிய விட்டுக்கொடுப்புக்களோடு நடப்பதும் ஜேவிபிக்குமுக்கியம். தன்னை தேசிய மக்கள் சக்தியாக்கக் காட்டிக்கொண்டு புதிய அரசியல் பாதையை கட்டமைக்க ஜேவிபி முயன்றுவரும் வேளையில் அடுத்துவரவுள்ள மாதங்கள் அது தமிழ், முஸ்லிம் மக்கள் தொடர்பில் மேற்கொள்ளவுள்ள அணுகுமுறை அதன் எதிர்கால அரசியல் வெற்றிகளுக்கு இன்றியமையாதது.

# யார் இந்த அநுர?



1. முழுபெயர்-திஸாநாயக்கமுதியன்சலாகே அநுரகுமார திஸாநாயக்க.

2. பிறப்பு - 1968.11.24.

3. பிறந்த ஊர் - கலேவெல - நான்கு வருடங்களுக்கு பிறகு கெக்கிராவையில் குடியேறினார்.

4. ஆரம்ப கல்வி - தம்புத்தேகம காமினி வித்தியாலயம்.

5. உயர் கல்வி - தம்புத்தேகம மத்திய கல்லூரி.

குறித்த பாடசாலையிலிருந்து உயர்தரத்தில் சித்தியடைந்து - பல்கலைக்கழகத்துக்கு தெரிவான முதல் மாணவர் இவராவார்.

6. 1992இல் களனி பல்கலைக்கழகத்துக்கு தெரிவான இவர் 1995 இல் பட்டதாரியானார்.

7. 1997இல் சோஸலிச இளைஞர் அமைப்பின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

8. 1997இல் ஜே.வி.பியின் மத்திய செயற்குழு உறுப்பினராகவும், 1998 இல் ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டார்.

9. 1998இல் மத்திய மாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட்டார்.

10. 2000இல் நாடாளுமன்றத்துக்கு தெரிவானார்.

11. 2004 இல் குருணாகலை மாவட்டத்தில் போட்டியிட்டு அதிக விருப்பு வாக்குகளுடன் நாடாளுமன்றத்துக்கு தெரிவானார். கூட்டணி அரசாங்கத்தில் விவசாய அமைச்சர் பதவியையும் வகித்தார்.

12. 2008 இல் ஜே.வி.பியின் நாடாளுமன்ற குழு தலைவராக நியமிக்கப்பட்டார்.

13. 2010 இல் தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு .

14. 2014 ஜனவரி 2 ஆம் திகதி ஜே.வி.பியின் தலைவராக நியமிக்கப்பட்டார். அவர் பதவியேற்றபின்னர் மாகாணசபைத் தேர்தலில் ஜே.வி.பியின் வாக்கு வங்கி அதிகரித்தது.

15. 2015 நடைபெற்ற பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். எதிர்க்கட்சி பிரதம கொறடாவாகவும் செயற்பட்டார்.

16. 2019 ஆகஸ்ட் 18 ஆம் திகதி தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக பெயரிடப்பட்டார்.

17. 1982ஆம் ஆண்டு நடந்த முதலாவது ஜனாதிபதி தேர்தலில் ஜேவிபி சார்பில் அதன் நிறுவுநரான றோகண விஜேவீர போட்டியிட்டு, 273,428 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

18. அதன் பின்னர்,1999 ஜனாதிபதி தேர்தலில் ஜேவிபி சார்பில் நந்தன குணதிலக போட்டியிட்டு, 344,173 வாக்குகளைப் பெற்றிருந்தார். (தற்போது ஐக்கிய தேசியக்கட்சியில் அங்கம் வகிக்கின்றார்)

19. 2010 இல் பொது வேட்பாளராக களமிறங்கிய பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கினார்.

20. 2015 இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவில்லை. எனினும், மஹிந்தராஜபக்சவுக்கு வாக்களிக்ககூடாது எனப் பரப்புரை செய்தார்.

# அநுரவின் நாடாளுமன்ற இடத்திற்கு லக்ஷ்மன் நிபுன ஆராச்சி நியமனம்!



ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க தெரிவுசெய்யப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு லக்ஷ்மன் நிபுன ஆராச்சி நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படவுள்ளதேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# தண்ணீர் நிரம்பிய தொட்டியில் விழுந்து 11 மாத குழந்தை சாவு

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் தண்ணீர் நிரம்பிய தொட்டியில் விழுந்து குழந்தை உயிரிழந்துள்ளார் என முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தசம்பவம்ஞாயிற்றுக்கிழமைஇடம்பெற்றுள்ளது.

11 மாத வயதுடைய குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

குழந்தை தனது தாயுடன் குளியலறையில் இருந்தபோது தண்ணீர் நிறைந்த தொட்டியில் விழுந்து நீரில் மூழ்கியுள்ள நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தசம்பவம்தொடர்பானமேலதிகவிசாரணைகளை முல்லைத்தீவுபொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர். (05)

# இன, மத, பேதம் அற்றனவாக அநுர ஆட்சி சிறப்பாக அமையும்

## வாழ்த்துச் செய்தியில் இராஜேஸ்வரன் நம்பிக்கை



(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மக்கள் எதிர்பார்த்த மாற்றத்துக்கு ஏற்ப இன, மத, பேதமற்ற சிறப்பாக ஆட்சி செய்வார்.

இவ்வாறு புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அனுரகுமார திசாநாயக்கவிற்கு, தமிழ்த்தேசியகூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பேராசிரியர் முருகேசு இராஜேஸ்வரன் அனுப்பிய வாழ்த்து செய்தியில் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச்செய்தியில் மேலும் குறிப்பிடப்படுலதாவது -

கடந்த பல்லாண்டு காலமாக அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் எதிர்நோக்கிவரும் இன்னோரன்ன பிரச்சினைகள் ஜனாதிபதியாகிய தங்கள் காலத்தில் தீர்த்து வைக்கப்படும் என்று பெரிதும் நம்புகிறேன்.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் படும் துன்பங்கள் கொஞ்சநஞ்சம் அல்ல, தொடர்ச்சியாக எமது மக்களை ஏமாற்றிக்கொண்டு ஒரு சில அரசியல்வாதிகள் தங்களுடைய சுயலாபங்களை அடைந்தவையே மிச்சம். எல்லா மாவட்டங்களிலும் ஒப்பிடும் பொழுது அம்பாறை மாவட்ட தமிழ்ப்பிரதேசங்கள் அனைத்தும் பின் தங்கியே காணப்படுகின்றன. எதிர்காலத்தில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களை அங்கு வசிக்கின்ற மக்களே ஆள வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதியிடம் கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பாக பேசியிருந்தேன். எமக்கு எல்லைநிர்ணயம்தேவையில்லை. உடனடியாக கணக்காளர் நியமிக்கப்படவேண்டும் என்று தங்களை கேட்கிறேன்.

நான் மாகாண சபை உறுப்பினராக இருந்த போது நாவிதன்வெளி, சம்மாந்துறை, கல்முனை வலய தமிழ் பாடசாலைகளை உள்ளடக்கிய கல்முனை வடக்கு கல்வி வலயம் உருவாக வேண்டியதன் அவசியம் கருதி பல முன்னெடுப்புக்களை செய்திருந்தேன். அதனை நிவர்த்திசெய்துதரவேண்டும்எனும்கோரிக்கையையும் முன்வைக்கிறேன். பட்டதாரிகளுக்கு நேரடியாக தொழில் வழங்க வேண்டும். - என்றார்.(05)



# யாழ்ப்பாணத்திலும் வெற்றிக் கொண்டாட்டம்

## பொங்கல் பொங்கி பகிர்ந்துண்டனர்

புதிய ஜனாதிபதியாக அநுர குமார திசாநாயக்க நேற்று (திங்கட்கிழமை) பதவியேற்றார்.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி அலுவலகம் முன்பாக, ஆதரவாளர்கள் பொங்கல் பொங்கி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். (05)

# தோப்பூரில் பாற்சோறு வழங்கி மக்கள் மகிழ்ச்சி கொண்டாட்டம்






(எச்.எம்.ஹலால்தீன்)

தோப்பூரில் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியின் பதவி ஏற்பை அடுத்து பாற்சோறு வழங்கி கொண்டாட்டம் மக்களால் பெருமெடுப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் பதவி ஏற்றதை அடுத்து நேற்று தோப்பூர் பொதுமக்கள்,கட்சி ஆதரவாளர்கள், தொண்டர்களால் பால் சோறு வழங்கி கொண்டாடப்பட்டது.

பொதுமக்கள் மற்றும் வீதிகளில் பயணித்தவர்களுக்கும் ஆதரவாளர்கள் பாற்சோறு வழங்கி மகிழ்ச்சி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



# அநுர ஜனாதிபதியின் பதவியேற்பை முன்னிட்டு கிண்ணியாவில் கேக் வெட்டி கொண்டாட்டம்





இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவின் பதவி ஏற்பதை அடுத்துநேற்றுகிண்ணியபுஹாரியடி சந்தியில் பொதுமக்கள், கட்சி ஆதரவாளர்களால் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

இதேவேளை சுற்றுவெடி கொளுத்தி மிகவும் அமைதியான முறையில் கொண்டாடப்பட்டது.

இதுவரை காலமும் இல்லாத அமைதியான முறையில் ஜனாதிபதியின் வெற்றிக் கொண்டாட்டம் இவ்வாறு கொண்டாடப்படுவது கிண்ணியா புஹாரியாடி சந்தியில் இதுவேமுதல் தடவையாகும். (05)









# ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவின் வெற்றி சம்மாந்துறையில் கொண்டாட்டம்!

(தில்சாத் பர்வீஸ்)

இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதியாக வெற்றி பெற்று பதவியை ஏற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் தேசிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை பிரதேச ஆதரவாளர்கள் திங்கட்கிழமை காலை 09.30 மணி முதல் சம்மாந்துறை நகர்ப் பகுதியில் பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர்.

இந்நிகழ்வு தேசிய மக்கள் சக்தியின் உயர்பீட உறுப்பினர் முஹம்மட் புஹாரி தலைமையில் நடைபெற்றது.

பொது மக்கள் பலரும் மிகவும் மகிழ்ச்சியுடன் இனிப்புப் பண்டத்தைப் பெற்றுக் கொண்டனர்.(05)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



## இலங்கையர்களுக்கு அமெ. பாராட்டு ஜனாதிபதி அநுரவுக்கும் வாழ்த்து

இலங்கை ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வாழ்த்து தெரிவித்துள்ளது.

அதில், வாக்களிக்கும் உரிமையை அமைதியான முறையில் பயன்படுத்திய இலங்கை மக்களை நாங்கள் பாராட்டுகிறோம்.

இந்த தேர்தல் இலங்கையின் ஜனநாயக அமைப்பின் பலம், அமைதி மற்றும் ஜனநாயக வழிமுறைகளின் மூலம் அவர்களின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் குடிமக்களின் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும்.

ஒரு நிலையான, வளமான மற்றும் ஒருங்கிணைக் கப்பட்ட சமூகத்தைக் கட்டியெழுப்ப இலங்கைக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கும்.

ஜனநாயக விழுமியங்கள் மற்றும் தேசிய இறையாண்மைக்கு மதிப்பளிக்கும் அடிப்படையிலான எமது இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்காக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திஸாநாயக்கவுடன் இணைந்து செயற்பட நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்.

நமது நாடுகளுக்கு இடையே பொருளாதார, பாதுகாப்பு மற்றும் ஆழமான ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும் நாங்கள் எதிர்பார்க்கிறோம் என அமெரிக்காவின் உத்தியோகபூர்வ தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.(05)

# இலங்கை மக்கள் அனைவரையும் சமநோக்கோடு இலங்கையின் புதிய ஜனாதிபதி நோக்க வேண்டும்

### சர்வதேச இந்து மத பீடம் வலியுறுத்து

9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்ட அநுரகுமார திசாநாயக்க, இலங்கை வாழ் அனைத்து மக்களையும் சம நோக்கோடு அணுகி இந்த நாட்டில் ஒரு தாய் மக்கள் என்ற உணர்வை வலுவூட்டி செயற்பட சர்வதேச இந்து மத பீடம் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிப்பதாக அதன் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் தெரிவித்துள்ளார்.



குறிப்பாக வடக்கு கிழக்கு மக்கள் இம்முறை கூடுதலான வாக்குகளை புதிய ஜனாதிபதிக்கு அளித்திருக்கிறார்கள். இந்த வெற்றியில் வடக்கு கிழக்கு மக்களும் பங்கெடுத்தமை ஒரு பாராட்டத்தக்க விடயம். சகல மதங்களையும் சகல இனங்களையும் சுய கௌரவத்தோடு நடத்தி கலை கலாசாரங்களை உரிய முறையில் முன்னெடுப்பதற்கு அனைத்து விதத்திலும் புதிய ஜனாதிபதி பங்களிப்பதுடன் தத்தம் இனங்களின் அடையாளங்களை அவர்கள் வெளிக்காட்டுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும் என அவரது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.(05)

# எனது தந்தை லசந்தவின் படுகொலைக்கு அனுரவின் தலைமையின் கீழ் நீதிவேண்டும்

### மகள் அஹிம்சா உருக்கம்

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த லசந்தவிக்கிரமதுங்கவின் படுகொலைக்கு புதிய ஜனாதிபதி அனுரகுமாரதிசநாயக்க நீதிவழங்கவேண்டும் என லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அஹிம்சா விக்கிரமதுங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.


அதிகாரத்தில் உள்ளவர்களிற்கு எதிராக உண்மையை பேசியமைக்காக நியாயமற்ற விதத்தில் பறிக்கப்பட்ட எனது தந்தையின் உயிருக்காக நீதியை பெற்றுக்கொள்வது குறித்து நானும் எனது குடும்பமும் உறுதியாக உள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தின் முன்னால் உண்மைய பேசியமைக்காக 15 வருடங்களிற்கு முன்னர் நியாயமற்ற விதத்தில் பறிக்கப்பட்ட எங்களின் தந்தையின் உயிருக்கு நீதியை பெற்றுக்கொள்வது குறித்து நானும் எனது குடும்பமும் தளராத உறுதியுடன் காணப்படுகின்றோம் என அறிக்கையொன்றில் அவர் தெரிவித்துள்ளார்.

15 வருடங்களாகின்ற போதிலும் அந்த வலி வேதனை தொடர்கின்றது. ஆனால் உண்மை பொறுப்புக்கூறலை நிலைநாட்டுவது குறித்து நான் மிகவும் உறுதியான அர்ப்பணிப்புடன் உள்ளேன் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 15 வருடங்களாக ஆட்சியில் உள்ள அரசாங்கம் எனது தந்தையின் படுகொலை குறித்து அர்த்தபூர்வமான நடவடிக்கையை எடுக்க தவறிவிட்டது. இது நாட்டில் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படும். கலாசாரம் நிலவுவதை வெளிப்படுத்தியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தேர்தல் முடிவுகள் எனது நம்பிக்கையை புதுப்பித்துள்ளன.ஜேவிபி வரலாற்றுரீதியில் அதிகாரவர்க்கத்தை கடுமையாக விமர்சித்து வந்துள்ளது. இலங்கையின் சமீபத்தைய மனித உரிமை வரலாற்றில் இடம்பெற்ற அநீதிகளிற்கு தீர்வை காண்பதில் இந்த புதிய தலைமைத்துவம் புதிய நோக்கத்தைக் கொண்டுவரும் என நான் நம்புகின்றேன்.



எங்களின் துணிச்சலான திறமை மிக்க சிஐடி அதிகாரிகள் சானி அபயசேகர, நிசாந்த டி சில்வா போன்றவர்களிடம் பெருமளவு ஆதாரங்கள் காணப்பட்ட போதிலும், கடந்த 15 வருடங்களாக ஆட்சியில் உள்ள அரசாங்கம் எனது தந்தையின் படுகொலை குறித்து அர்த்தபூர்வமான நடவடிக்கையை எடுக்கத் தவறிவிட்டது. இது நாட்டில் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படும் கலாசாரம் நிலவுவதை வெளிப்படுத்தியுள்ளது.

மக்கள் தங்கள் எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள், ராஜபக்ஷவின் பயங்கர ஆட்சியின் கீழ் பயங்கரமான இழப்புகளை சந்தித்த எனது தந்தைக்கும் ஏனைய குடும்பங்களிற்கும் நீதியை வழங்குவேன் என உறுதியளித்துள்ள அனுரகுமாரதிசநாயக்கவை நாங்கள் வாழ்த்துக்கின்றோம்.

இலங்கையில் நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலைநாட்டுவதற்காக நாங்கள் இந்த அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட ஆர்வமாகவுள்ளோம்.

நீதிக்கான பாதை நீண்டது; கடினமானது என்ற போதிலும் எனது தந்தைக்கான எனது போராட்டத்தில் அவரது பாரம்பரியத்தை கௌரவிப்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். (05)



## அமைதியான....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் செயற்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட 39 பேரில் பெண் வேட்பாளர்கள் எவரும் உள்ளடங்காமை மிகுந்த கரிசனைக்குரியது. எதிர்வரும் காலத்தில் இது குறித்து அவதானம் செலுத்தப்படவேண்டியது அவசியம்.

39 வேட்பாளர்களில் சிலர் பரப்புரை நடவடிக்கைகளைக்கூட முன்னெடுக்கவில்லை. அவர்களுக்காக அரச நிதி செலவிடப்படுவது கரிசனைக்குரிய விடயமாகும். இதனைச் சீரமைப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

இலங்கை வரலாற்றில் நடைபெற்ற மிகவும் அமைதியான தேர்தல் இதுவென தேர்தல்கள் ஆணைக்குழுவினால் கூறப்பட்ட அதே தினத்தில், திடீரென ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை ஒன்றுக்கொன்று முரணான தன்மையைக் காண்பித்தது.

தேர்தல் பரப்புரைகளின்போது சம்பள உயர்வு, வட்டி அற்ற கடன் போன்ற நடைமுறைச் சாத்தியமற்ற வாக்குறுதிகளை வழங்கும் போக்கு ஏற்புடையதல்ல.

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக்குழுவுக்கு தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியில் 5000 முறைப்பாடுகளும், தேர்தல் தினத்தன்று 600 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றன என ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக்குழுவின் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## பதவியேற்ற.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேரரைச் சந்தித்து நலம் விசாரித்ததுடன், அவருடன் சிறிது நேரம் உரையாடினார்.

இதன்போது அவர் செத்பிரித் பாராயணம் செய்து,ஜனாதிபதியின்எதிர்காலபணிகளுக்காக ஆசி வழங்கினார். அதன் பின்னர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அஸ்கிரிய மகா விகாரைக்குச் சென்று அஸ்கிரிய தரப்பு மகாநாயக்க தேரர் வரகாகொட ஸ்ரீ ஞானரதன தேரரை சந்தித்த ஆசி பெற்றார்.

இதன்போது அஸ்கிரிய தரப்பு அனுநாயக்க தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர், புதிய ஜனாதிபதிக்கு செத்பிரித் பாராயணம் செய்து ஆசீர்வதித்தனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால் காந்தவும் இந்தச் சந்திப்பில் இணைந்துகொண்டார்.

இதனையடுத்து ஜனாதிபதி அநுரகுமார கட்டுக்கலை மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்திற்கும் சென்று வழிபாடுகளை மேற்கொண்டிருந்தார்.

## இன்னும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைக் கலைப்பதாக அறிவிக்கும் வர்த்தமானியில் வேட்புமனு தாக்கலுக்கான தினத்தையும் தேர்தலுக்கான தினத்தையும் குறிப்பிட வேண்டியதில்லை. அதாவது இவ்வாரம் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் டிசெம்பர் முதல் வாரத்துக்குள் நிச்சயம் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

தற்போதுள்ள நாடாளுமன்றத்துக்கும் மக்கள் ஆணை கிடையாது. எனவே இந்த நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலொன்று நடத்தப்பட வேண்டும். அதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் நடத்தி மக்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்த வேண்டும்.

தற்போது மாகாண சபைகளும் காணாமலாக்கப்பட்டிருக்கின்றன. அவை தொடர்பிலும் அவதானம் செலுத்தவேண்டும். ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்காக நாம் முன்னிற்போம். 13ஆவது திருத்தமா அல்லது 13 பிளஸா என்பது இரண்டாம் பட்சமாகும். ஆனால் கொழும்பு அரசின் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம் என்றார்.






# யாழ்ப்பாணத்தில் உணவகமொன்றுக்கு சீல் : 15 உணவக உரிமையாளர்களுக்குத் தண்டம்

யாழ்ப்பாணத்தில் சுகாதர சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவகமொன்றுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதுடன், 15 உணவகங்களுக்கு ஒரு லட்சத்து 40ஆயிரம்ரூபாதண்டம்விதிக்கப்பட்டுள்ளது.

உடுவில்சுகாதாரவைத்தியஅதிகாரிபணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் இயங்கும் உணவகங்களில் சுகாதார பரிசோதகர்களால் திடீர் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது.

அதன்போது, உரிய முறையில் குளிர்சாதன பெட்டியை பேணத் தவறியமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, மருத்துவ சான்றிதழ் கொண்டிராமை, சுகாதார முறைப்படி உணவு கையாளும் இடப்பரப்பினை பேண தவறியமை, உபகரணங்களை உரிய முறையில் பேண தவறியமை போன்ற செயற்படுகளுக்கு எதிராக உரிமையாளர்களுக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கு வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது 15 உரிமையாளர்கள் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து, அவர்களை கடுமையாக எச்சரித்த மன்று, உரிமையாளர்களுக்கு ஒரு லட்சத்து நாற்பதாயிரம் ரூபா தண்டம் விதித்தது.

அதேவேளை, ஓர் உரிமையாளரின் உணவகத்திலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும்வரையில்உணவகத்திற்குசீல்வைக்குமாறு உத்தரவிட்டது.

(05)

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கட்டடத்திலிருந்து விழுந்த பெண் தொழிலாளி

## சிகிச்சை பயனின்றி உயிரிழப்பு

யாழ். போதனா வைத்தியசாலையின் கட்டடத்தில் இருந்து தவறி விழுந்த பெண் தொழிலாளி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - திருநகர் பகுதியை சேர்ந்த 19 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

வைத்தியசாலையில் துப்புரவுத் தொழிலாளியாக பணியாற்றி வந்த குறித்த பெண் கடந்த 31ஆம் திகதி வைத்தியசாலை கட்டடம் ஒன்றின் நாலாம் மாடியில் இருந்து தவறி விழுந்துள்ளார்.

தவறி விழுந்ததில் படுகாயமடைந்த பெண்ணுக்கு வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சேர்த்து , சிகிச்சை வழங்கப்பட்டு வந்த போதிலும் , கடந்த சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். (05)

# கடற்றொழிலுக்கு சென்றவர் படகிலிருந்து சடலமாக மீட்பு



கடற்றொழிலுக்கு சென்றவர் ஞாயிற்றுக்கிழமை படகினுள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அராலிமத்தி,வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

குறித்த நபர் ஞாயிற்றுக்கிழமை மாலை5.30மணியளவில்அராலியில் இருந்து தனியாக கடற்றொழிலுக்கு சென்றுள்ளார்.

இவ்வாறு சென்றவர் நேற்று காலை வரை திரும்பி வரவில்லை.

இந்நிலையில் தேடுதலில் ஈடுபட்ட ஊரவர்கள், அவரது சடலமானது பொன்னாலை கடலில் படகுடன் கரையொதுங்கி இருந்ததை அவதானித்தனர்.

சடலத்தின் வாயில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும்தெரியவந்துள்ளது.

இந்நிலையில், வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் வழங்கப் பட்டதுடன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# தேர்தல் வாக்கெண்ணும் நிலையத்தில் தகராறு; ஒருவர் காயம் - இருவர் கைது

கொழும்பு பிரதேசத்தில் உள்ள ஜனாதிபதி தேர்தல் வாக்கெண்ணும் நிலையம் ஒன்றில் இடம்பெற்ற தகராறில் பெண் ஒருவர் காயமடைந்த சம்பவம் தொடர்பில் அரசியல் கட்சி உறுப்பினர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என கருவாத்தோட்டம் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு வெள்ளவத்தை மற்றும் கொழும்பு ஹைலெவல் வீதி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மற்றும் வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது -

கொழும்பு பிரதேசத்தில் உள்ள ஜனாதிபதி தேர்தல் வாக்கெண்ணும்நிலையம்ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை அரசியல் கட்சி உறுப்பினர்கள் இருவர் தகராறில் ஈடுபட்டுள்ளதுடன் அங்கிருந்த பெண் ஒருவரைக் கீழே தள்ளிவிட்டுக் காயப்படுத்தியுள்ளனர்.

காயமடைந்த பெண் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்ற பின்னர் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

கொழும்பு வெள்ளவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவரே காயமடைந்துள்ளார்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(05)

# யாழ். வல்லிபுரக் கடல் தீர்த்தத்தின் போது காணாமல்போன ஆசிரியர் சடலம் மீட்பு

## விசாரணைகளின் பின்: உறவினர்களிடம் ஒப்படைப்பு



யாழ். வல்லிபுர ஆழ்வார் ஆலய கடல் தீர்த்தத்தின் போது , கடலில் மூழ்கி காணாமல் போன நிலையில் மீட்கப்பட்ட ஆசிரியரின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கடல் தீர்த்தத்தின் போது, வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியரான நுணாவில் பகுதியை சேர்ந்த தயாசீலன் வைஷ்ணவன் (வயது 28) என்பவர் கடலில் மூழ்கி காணாமல் போயிருந்தார்.

அவரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் சனிக்கிழமை தமிழக கடற்பரப்பை அண்டிய பகுதியில் கடலில் சடலமாக மீட்கப்பட்டார்.

சடலம் கரைக்கு கொண்டு வரப்பட்டு, உடற்கூற்று பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

சடலத்தின் உடற்கூற்று பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளை அடுத்து ஞாயிற்றுக்கிழமை சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதேவேளை கடல் தீர்த்தத்தின் போது குடத்தனையை சேர்ந்த கந்தசாமி வினோகரன் (வயது 54) என்பவர் கடலில் மூழ்கி உயிரிழந்த நிலையில் அன்றைய தினமே சடலமாக மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை கடல் தீர்த்தத்தின் போது இருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தமை பக்தர்கள் இடையில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.(05)

# பட்டாசு கொளுத்தி மகிழ்ந்த இளைஞர் காயமடைந்து வைத்தியசாலையில்

புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் வெற்றியைக் கொண்டாடுவதற்குப் பட்டாசுகளைக் கொளுத்தி மகிழ்ந்த இளைஞன் ஒருவன் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என ஹொரணை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரணை பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞனே காயமடைந்துள்ளார்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது -

இந்த இளைஞன் புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் வெற்றியைக் கொண்டாடுவதற்கு வீதியின் நடுவே பட்டாசுகளைக்கொளுத்தி மகிழ்ந்த நிலையில் பட்டாசுகள் வெடிக்காமலிருந்துள்ளன.

பின்னர், இந்த இளைஞன் குறித்த பட்டாசுகளைச் சோதனையிட்டுப் பார்த்துக் கொண்டிருக்கும் போது அந்த பட்டாசுகள் திடீரென வெடித்துள்ளன.

இதனையடுத்து,காயமடைந்த இளைஞன் சிகிச்சைக்காக வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (05)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிவு ; தேசியகல்வி நிறுவக திட்டமிடல் பணிப்பாளர் கைது

2024ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் வினாக்கள் வெளியாகிய சம்பவம் தொடர்பில் மஹரகமவில் உள்ள தேசிய கல்வி நிறுவகத்தின் திட்டமிடல் பிரிவின் பணிப்பாளர் ஒருவர் குற்றப்புலனாய்வுதிணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

57 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரால்ஐந்தாம்தரபுலமைப்பரிசில்பரீட்சை வினாத்தாளின் சில வினாக்கள் வெளியாகியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

(05)

# கூரிய ஆயுதத்தால் தாக்கித் தந்தை கொலை ; மகளின் காதலனின் உறவினர் தப்பியோட்டம்

நுகேகொடை, உடஹமுல்ல பிரதேசத்தில் மகளின் காதலனின் உறவினர் ஒருவரால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு தந்தை ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக மிரிஹான பொலிஸார் தெரிவித்தனர்.

உடஹமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய தந்தையே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

சந்தேக நபரும் கொலை செய்யப்பட்ட தந்தையும் நீண்ட காலமாக தகராறில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

சம்பவத்தன்று சந்தேக நபரான மகளின் காதலனின் உறவினர் சில நபர்களுடன் இணைந்து கொலை செய்யப்பட்ட தந்தையுடன் தகராறில் ஈடுபட்டுள்ள நிலையில் அவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மிரிஹான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கவுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வாழ்த்து

ஜனாதிபதி அனுராகுமார திசநாயக்கவுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக வாழ்த்து தெரிவிப்பதாக எம். நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஒன்பதாவது ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொண்ட அனுரகுமார திசாநாயக்கவுக்கு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக என்னுடைய வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தல், இலங்கையில் சரித்திரத்தில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஜனநாயக செயன்முறையாகும்.

இந்த தருணத்தில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாட்டை ஆதரித்து நாங்கள் ஆதரவு வழங்கிய சஜித் பிரே மதாஸவுக்கு வாக்களித்த முஸ்லிம் மக்கள் உட்பட அனைத்து வாக்காளர்களுக்கு எங்களுடைய நன்றிகளை தெரிவித்துக்கொள்ளவும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

இத்தேர்தலை நேர்மையாகவும் நியாயமாகவும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்த தேர்தல் ஆணைக்குழு, பொலிஸார் மற்றும் மற்றைய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எங்கள் பாராட்டை தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தேர்தல் ஒரு புதிய அரசியல் கலாசாரத்துக்கும், புதிய அரசியல் சிந்தனைக்கும், அது பற்றிய அணுகுமுறைக்குமான, மக்கள் எழுச்சியை உருவாக்கியுள்ளது. இது இலங்கைப் பிரஜைகளான நம் எல்லோருக்கும் கிடைக்கப் பெற்ற ஒருமித்த செய்தியாகும்.

சிங்கள மக்களின் ஆதரவை , அத்தகைய கொள்கைத்தளத்தின் மீது, அனுரகுமார திசாநாயக்க பெற்றிருப்பது அந்த புதிய அரசியல் கலாசாரத்தின் மூலக்கல் எனலாம்.

எந்த விதமான சிங்கள பௌத்த தேசிய உணர்வுகளோ, அல்லது வேறு எந்த மேலாண்மை வாதங்களோ முன்வைக்கப்படாமல் அடையப்பட்ட அனுரகுமார திசாநாயக்கவின் வெற்றி கூர்ந்து கவனிக்கத்தக்கது.

மேலும் ஊழலற்ற அரசியலை , இன மத மொழி வேறுபாடுகளுக்கு அப்பால், ஒற்றுமைப்பட்ட தேசம் என்ற அடிப்படையில் இலங்கை மக்கள் விரும்பி நிற்பதையும் உணரக் கூடியதாக உள்ளது.

இந்தப் பின்னணியில் புதிய ஜனாதிபதி அனுராகுமாரதிசாநாயக்கமக்களின்நலனுக்காக கொடுத்த வாக்குறுதிகளை நிறை வேற்றி இந்த நாட்டின் ஜனாதிபதியாக தன்னுடைய வேலை திட்டங்களை முன்னெடுப்பார் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதற்கான சகல ஒத்துழைப்பை ஜனாதிபதிக்கு வழங்குவதற்கு எப்பொழுதும் தயாராக உள்ளது. - என்றார்.(05)

# கொழும்பில் துப்பாக்கிச் சூடு

## ஒருவர் காயம்

கொழும்பு, மாளிகாவத்தை , ஸ்ரீ சத்தர்ம மாவத்தை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

மாளிகாவத்தை, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை பகுதிக்கு ஞாயிற்றுக் கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத நபரொருவர் வீடொன்றிற்கு முன்பாக இருந்த நபரொருவர் மீது துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.


இதனையடுத்து, துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய தெஹிவளை சோல் பீச் விடுதியின் உரிமையாளரே காயமடைந்துள்ளார்.

மேலும், துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட சந்தேக நபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# சீன நாட்டு ஜனாதிபதி அநுரவுக்கு வாழ்த்து



இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள அநுரகுமாரதிசநாயக்கவிற்கு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

சீனஜனாதிபதிதனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது–

சீன அரசாங்கத்தின் சார்பிலும் மக்களின் சார்பிலும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இலங்கையும் சீனாவும் பாரம்பரிய நட்பு அயல்நாடுகள், இருநாடுகளும் இராஜதந்திர உறவை ஏற்படுத்தி 67 வருடங்களாகின்ற நிலையில் இரு நாடுகளும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வையும்,ஆதரவையும் வழங்கிவருகின்றன.

இதன் மூலம் இருநாடுகளும் நட்புறவுமிக்க சகவாழ்வு வெளவேறு அளவிலானநாடுகளிடையிலான பரஸ்பரம் நன்மையளிக்க கூடிய ஒத்துழைப்பு ஆகியவற்றிற்கான சிறந்த உதாரணங்களாகும்.

நான் இலங்கைசீனஉறவுகளிற்குபெரும்முக்கியத்துவத்தை வழங்குகின்றேன். உங்களுடன் பாரம்பரிய நட்புறவை முன்னெடுப்பதற்கும் ,பரஸ்பர அரசியல் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கும் புதிய பட்டுப்பாதை திட்டத்தில் வெற்றிகரமான விடயங்கள சாதிப்பதற்கும் என நான் ஆர்வமாக உள்ளேன். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.09.2024இல் வெளியிடப்பெற்றது